சிவமயம்

...gistered as a News paper in Ceylon

P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்

28-ஆவது ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞூ ஆடிமீ ௩௨ (1946 ஜூலை 19 வெள்ளிக்கிழமை) [இல ௩௦


# அழுத பிள்ளையே பால் குடிக்கும்

## யாழ்ப்பாணத்துக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகள் அரசினரிடம் வாதிட்டுப் பெறல்வேண்டும்

### மகாவலி கங்கையைத் திருப்ப வழி

(ஸ்ரீ V. சோமசுந்தரம்)

வடமாகாணத் தலைவர்க்கு இந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர்ப்பாய்ச்சும் விஷயமாக ஓர்கடிதம் எழுதியுள்ளேன். அது பின்வருமாறு:

'நிலாவரை யூற்றி விருந்து 1800 ஏக்கர் நிலத்துக்குத்தான் நீர்ப்பாய்ச்சப் போதுமென்று நான் பத்திரிகை மூலம் அறிந்தேன். அப்படியென்றால், இதுபோன்ற நீர் நிலைகளைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சலாம் என்று கருதிச் சில யோசனைகளைத் தங்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

"எனக்குத் தெரிந்த வரையில், இந்த நிலாவரைபோல் இன்னும் மூன்று வற்றா நீர்நிலைகள் இந்தக் குடாநாட்டில் உண்டு. அவையாவன:

1. புழுனி: இதிலுள்ள நீர் செம்மணி, அரியாலை, நாயன்மார்கட்டு, மறவன்புலவு, நல்லூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் உள்ள தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் பயன்படலாம்.

2 திருநெல்வேலி அரசாங்கத் தோட்டக் கிணறு: இதிலிருந்து திருநெல்வேலியில் ஓர் பகுதி, கொக்குவில், கோண்டாவில், கோப்பாய், சுதுமலை, தாவடி முதலிய கிராமங்களுக்கு நீர்ப்பாய்ச்சலாம்.

3. கரணவாயில் உள்ள நவிண்டிற் கிணறு: இதுவும் ஓர் வற்றா நீர்நிலை. இதிலிருந்து, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, கரவெட்டி முதலாம் கிராமங்களுக்கு தண்ணீர் இறைக்கலாம், 'மேலே சொல்லப்பட்ட இந்த நான்கு நீர் நிலைகளிலும், நிலாவரையிற் செய்துள்ளதுபோலக் குழாய்கள் பூட்டி நீர்ப்பாய்ச்ச உடன் வசதிகள் செய்ய வேண்டுமென்று தங்களை விநயத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன். உலகத்திலே உணவுப் பஞ்சம் வருகின்றது, வரப்போகின்றது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அப்படியென்றால், எங்கள் நாடு மிகவும் பாதிக்கப்படும் என்பது சொல்லாமலே விளங்கும். எனவே இந்தப் பேராபத்தினின்றும் நாம் தப்புவதற்காகவேனும், வேளாண்மை விருத்தி கருதி மேலே சொல்லிய நற்கைங்கரியத்தை உடனே ஆரம்பிக்க வேண்டியது

"மகாவலி கங்கையைத் திருப்பி வடமத்திய மாகாணத்துக்கும், வடமாகாணத்துக்கும் விடலாம். அதன் பயனாக இங்குள்ள விளைநிலங்களுக்கு நீர்ப்பாய்ச்ச முடியும். என்று இந்த விஷயத்தில் அநுபவமும் ஆற்றலும் உடைய நிபுணர்கள் கூறுகிறார்கள். இது ஓர் புதிதமான விஷயம். இது கைகூடுமானால் எங்கள் யாழ்ப்பாணம் செல்வம்கொழிக்கும் குபேர நாடாகி விடும் என்பதற்கையமில்லை: எனவே, தங்களை நான் விநயமாக வேண்டிக் கொள்வது ஒன்றுண்டு: எங்கள் சொந்தமனுஷராகிய தாங்கள்—இந்த யாழ்ப்பாணநாட்டு மக்கள் வாழ்வு தாழ்வுகளிற் பங்குபற்றும் தாங்கள்—இந்த மாகாணத்தின் தலைவராக இருப்பதுபற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். தாங்கள் இப்பதவியை விட்டு விலகி இளைப்பாற முன்னர், இந்த மகாவலி கங்கையைத் திருப்பி இந்த யாழ்ப்பாணத்துக்கு விடும் திட்டத்தை அமுலில் வரச் செய்து, எங்களது மாத்திரமல்ல, எங்கள் பிற்சந்ததியாரது மாத்திரமல்ல, எங்கள் நாடு இருக்கும் வரை எங்கள் மக்களினது பூரண நன்றியறிதலைப் பெற்றுக் கொள்ளுமாறு தங்களை மிகவும் விநயத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன்"

மேலே காட்டப்பட்ட கடிதத்தை நான் எங்கள் மாகாணத் தலைவர்க்குச் சமர்ப்பித்து உள்ளேன். இவ்வளவுடன் கருமம் ஜெயமடையுமென நாம் காத்திருக்கவொண்ணாது நன் மேலே காட்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும். விஞ்ஞான அறிவு பெருகியுள்ள இக்காலத்தில், எங்கள் மக்கள் ஏன் இன்னும் பாடுபட்டு, மேலும் மேலும் வறுமையடைய வேண்டும்? அரசாங்கம் தனது கடமையைச் செய்ய வேண்டும். அதற்கு ஊரவர் கிளர்ச்சி செய்ய வேண்டும் அழுத பிள்ளை தான் பால் குடிக்கும் என்பர்.

### பாதிக்கப்படமாட்டாதாம்

இலங்கையில் உள்ள இந்தியர்க்கிருக்கும் வாக்குரிமை சோல்பெரித் திட்டத்தின்படி பாதிக்கப்படுமா என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஓர் அங்கத்தவர்கேட்டார். டொனமூர்த் திட்டத்தின்படி இந்தியர்க்குள்ள வாக்குரிமைகள் இப்போது வரப்போகும் அரசியலிற் பாதிக்கப்படமாட்டாது: ஆனால் இதில் ஏதும் மாற்றம் செய்யவேண்டியிருந்தால், இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் கலந்தாலோசித்தே அப்படியான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று [illegible] மந்திரி பதிலளித்தார்.

# தங்கப்பவுண் விலை

## இனிக் குறைய உற்பாதங்கள்?

இங்கிலாந்துக்கு 93 கோடியே 75 லட்சம் பவுணைக் கடனாகக் கொடுக்க அமெரிக்க அரசாங்கம் கடைசியாகத் தீர்மானித்துவிட்டது. இந்தக் கடனை இங்கிலாந்து 50 வருஷ கால தவணையில் அமெரிக்காவுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

இந்தக் கடன் கிடைத்தபடியினால் இங்கிலாந்தின் பொருளாதாரநிலைமை அபிவிருத்தி எய்தும்என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகாறும் பணம் இன்மையினால், இங்கிலாந்து தனது கைத்தொழில் விருத்திக்கான யந்திர வகைகளையும், ஏனைய சாதனங்களையும் பெறமுடியாமல் இருந்தது. கடனைப் பெற்றதன்பயனாக, இனி அவற்றை வாங்கித் தனது கைத்தொழில்களை விருத்தி செய்ய இடமுண்டு.

தென் ஆபிரிக்கஅரசாங்கம் தனது சேமிப்பில் வைத்திருக்கும் தங்கத்தில் ஓர் பெருந் தொகையை இனி இங்கிலாந்துக்கு உதவும் என இப்போது தெரியப் படுகிறது. ஆண்டுதோறும் 8 கோடி பவுண் பெறுமதியான தங்கத்தை தென் ஆபிரிக்கா இனி இங்கிலாந்துக்கு அனுப்பும். இதன்பயனாக தங்கப்பவுண் வெளியில் விநியோகிக்கப்பட, அதன் விலை இப்போதிலும் பார்க்கப் படிப்படியாகக் குறையலாம்.

# புரட்சி இயக்கம்

## ஜப்பானில் தோற்றுகின்றது

ஜப்பானில் உள்ள சிலர் தங்களுடைய நாடு யுத்தத்தில் தோல்வியடையவில்லை என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவைச்சேர்ந்த றியோ டி ஜானெருவில் ஓர் இரகசிய ஜப்பானியப் புரட்சி இயக்கம் ஆரம்பமாகிக் கருமம் ஆற்றி வந்தது. அதனை அந்நாட்டு அதிகாரிகள் கண்டுபிடித்து அதனைக் கலைத்து, அதன் அங்கத்தவர் பலரைச் சிறையாக்கியிருக்கிறது. ஜூன் மாதத்தில் அப்படிச் சிறையானோர் தொகை 470 எனச் சொல்லப் படுகிறது.

# நாம் சகோதரரே

## இந்திய இலங்கை உறவுபற்றி மகாத்மா ஒருதாய் பிள்ளைகளைப் பிரிக்க முடியாது

### மகாத்மாவின் மணிவாசகம்

"இந்தியர்களும், இலங்கையர்களும் சகோதரர்களே. அவர்கள் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டுக் கொள்ளக்கூடாது அவர்கள் தங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டைக் களைந்து ஒன்றுபடவேண்டுமென்றே நாம் கருதுகிறோம்"! என்று மகாத்மாகாந்தி சென்ற 12-7-46ல் நிகழ்ந்த பிரார்த்தனைக் கூட்டத்திற் கூறினார்

மகாத்மாவின் அங்கீகாரம் பெற்ற பிரசங்கச் சுருக்கம் வருமாறு:—

"நான் பல வருஷங்களுக்கு முன் இலங்கைக்குச் சென்றிருக்கிறேன், வடக்கே பனிசூழ்ந்தஹிமாலயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள காஷ்மீரம் இந்தியத்தாயின் மணிமுடி என்றால், இலங்கை அவளது கழுத்தைச் சுற்றி அலங்கரிக்கும் மணிமாலையின் வைரப் பதக்கமாகும். இலங்கை பொன்னாடு' எனக் கூறப்படுவது சரியே. இலங்கையை அபிவிருத்தி செய்ய இந்தியர்கள் முக்கிய பங்கெடுத்து வேலைசெய்துள்ளனர். இப்பொழுது இலங்கையர்க்கு ஒருவகையான அரசியல் கிடைத்திருக்கிறது இதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஆனால் அவர்கள் இலங்கையிலிருந்து இந்தியர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று கருதுகின்றனர். இந்தியர்கள் அங்கு தொழிலாளர்களாகவே சென்றனர். பெருங் கஷ்டமும், உடல்நலிவும் அனுபவித்து அவர்கள் உழைத்தனர். மேலும் அவர்கள் இலங்கைக்காகவே உழைத்து [illegible] குடியேறிவிட்டனர். [illegible] அந்நாட்டைவிட்டுச் செல்வது அவர்களுக்குக் கஷ்டம் அவர்கள் இலங்கையருடன் சமத்துவ பிரஜா உரிமைகளையே விரும்புகின்றனர்.

'இந்தியர்கள் ஏககாலத்தில் இரண்டு குதிரைகள்மீது சவாரி செய்வது முடியாது என்பது இலங்கையர்கட்சி. இந்தியர்களானால் அவர்கள் இந்தியா திரும்பிவிடவேண்டும்; இல்லையேல் இலங்கையர்களாக மாறிவிடவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் இலங்கையில் இந்தியர்கள் இருப்பதை அனுமதிக்க விரும்பாதவர்களும் உண்டு. இது புதுமையானது; இந்தியர்களும் இலங்கையர்களும் சகோதரர்களே. ஒரு சிறிய நீர்ச்சால்வாய்தான் இந்தியாவையும் இலங்கையையும் பிரித்திருக்கிறது. தேக திடகாத்திரமுள்ள ஒருவன் இக்கால்வாயை எளிதில் நீந்திக் கடந்துவிடலாம். இந்நாட்டு மக்களும் கறுப்பர்களே இலங்கையர் புத்தமதத்தை அனுட்டிக்கிறார்கள். புத்தமதத்தின் பிறப்பிடமோ இந்தியா. இந்த நிலைமையில் இந்தியருக்கும் இலங்கையருக்கும் இப்போது நடைபெற்றுவரும் சச்சரவைக் கண்டு எவ்வாறு சகித்திருப்பது? இவர்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை யகற்றி ஒன்றுபடுத்தவே நாம் அனைவரும் விரும்புகிறோம். தகராறுபற்றி விசாரிக்க அகில இந்திய காங்கிரஸ் சபை நால்வர் அடங்கியசபை யொன்றை நியமித்து தீர்மானம் நிறைவேற்றி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞூ
ஆடிமீ ௨௨ வெள்ளிக்கிழமை

## உபாத்தியாயர்களின் முறையீடு

I

இந்நாட்டி லுள்ள பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் தங்கள் மாச வேதன விஷயமாகச் செய்துவரும் முறையீடு வீண் விவாதமல்ல; அவர்களுக்கு நேர்ந்துள்ள குறை உபாத்திமைத் தொழிலுக்கே பிரதிகூலமான தென்பது அவர்களுடைய வேதனத் திட்டத்தைத் தீர்க்கமாக ஆராய்வார்க்கு இலகுவிற் புலனாகும்; வேதன விசாரணைச் சபையினர் காரணமாகவே இந்த அநர்த்தங்களும் மனரம்மியக் குறைவும் முறையீடுகளும் உபாத்தியாயர்கள் விஷயத்தில் நேரலாயின்; குறித்த விசாரணைச் சபையினர் ஆசிரியர்களின் நிலைமையையுங் கடமைகளையும் பொறுப்புக்களையும் உள்ளவாறு விளங்கிக் கொள்ளும் ஆற்றலற்றாராய், அரசசேவை செய்யும் உத்தியோகத்தர்களின் நிலைமையிற் பள்ளிக்கூட ஆசிரியர்களையும் வைத்துக் கருமமாற்றத் துணிந்தனரேனும், அரசாங்க உத்தியோகத்தர் வேதன விஷயத்தில் ஒருவாறும் உபாத்தியாயர்கள் வேதன விஷயத்திற் பிறிதொருவாறும் நடந்து கொண்டார்கள்.

அரசாங்க பிரதான காரியதரிசியையும், நிதிப்பகுதிக் காரியஸ்தரையும் அங்கத்தவர்களாகக் கொண்ட இந்த விசாரணைச் சபையானது அரசாங்க உத்தியோகத்தரின் வேதன விஷயமாகவே விசாரணை செய்தற்கு நிர்வகிக்கப்பட்டதென்பது, குறித்த சபையினர் தாங்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைப் பத்திரத்தின் முன்னுரையில், தாங்கள் அரசாங்க உத்தியோகத்தர்களின் வேதன விஷயமாக விசாரணை செய்யும்படி நியமிக்கப்பட்டோமென்று தங்கள் கூற்றாகவே வரைந் திருத்தலைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். அந்த நோக்கத்தோடு நியமிக்கப்பட்ட இந்த விசாரணைச் சபையினர் அவ்வளவில் அமையாது, நாய் பார்க்கும் வேலையைக் கழுதை பார்க்கத் தலைப்பட்டுஇடர்ப்பட்டவாறு, உபாத்தியாயர்கள் வேதன விஷயத்திலே தலையிட்டமைக்குக் காரணம் புலப்படவில்லை; உபாத்தியாயர்களும் அரசினரிட மிருந்து இக்காலத்திற் சம்பளம் வாங்குபவர்கள்தாமே, ஆனதால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் உபாத்தியாயர்கட்கு மிடையில் என்ன பேதமென்று கேட்டால், பேத முண்டென்றே சொல்ல வேண்டும்; அரசினர் வித்தியாசாலைகளிற் கல்வி பயிற்றும் உபாத்தியாயர்கள் அரசினரிட மிருந்து நேரில் வேதனம் பெறுதலால் அவர்களை ஒருவாறு அரசாங்க உத்தியோகத்தருடன் வைத்தெண்ணுகினும் எண்ணலாம்; ஆனால் உதவி நன்கொடைப் பணம்பெறும் பள்ளிக்கூடங்களிற் கல்விபயிற்றும் உபாத்தியாயர்களை அரசாங்க உத்தியோகத்தருடன் வைத்தெண்ணுதற்கு எவ்வகையான ஏதுவு மில்லையாம்; அவர்கள் இன்றும் தத்தம் வித்தியாசாலை அதிபர்கள் மூலமாகவே தங்கள் வேதனத்தைப் பெற வேண்டியவர்களா யிருக்கிறார்கள். தக்க காரணங்காட்டி அப்படியான உபாத்தியாயர்களின் வேதனத்தைக் கட்டுப்படுத்துதற் காகிய அதிகாரம் இன்றும் வித்தியாசாலை யதிபர்களா யுள்ளார்க்கு உண்டெனலாம்.

அரசினர் உபாத்தியாயர்களை அரசாங்க உத்தியோகத்தர்களுடன் சமமாக வைத்து மதிக்கவில்லை யென்பதற்கும் அதிகம் கட்டுப்படுத்தவில்லை யென்பதற்கும் இன்னுமொரு ஏதுவை இங்கே யெடுத்துக் காட்டலாகும். அரசாங்க உத்தியோகத்தர் எக்காரணம் பற்றியும் அரசியல் சம்பந்தமான விஷயங்களிலே தேர்தல் விஷயங்களிலே சம்பந்தப்பட வொண்ணாது தலையிட வொண்ணா தென்ற கட்டுப்பாடு இன்றுமுண்டு; ஆனால் அப்படியான கட்டுப்பாடு உபாத்தியாயர்கள் விஷயத்தில் இன்னமும் இல்லையாகும். உபாத்தியாயர்கள் சிலசில கருமங்களில் தங்கள் தங்கள் வித்தியாசாலைகளின் அதிபர்களுக்கு உத்தரவாதிகளாக விருக்கின்றார்களே யொழிய, அரசினர்க்கு உத்தரவாதிகளா யிருக்க வேண்டிய காரணத்தைக் காணோம். இக்காரணங்களினாலே அரசாங்க உத்தியோகத்தர்களின் நிலைமையும் பொறுப்பும் வேறு, பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் நிலைமையும் பொறுப்பும் வேறென்பது ஒருவாறு காட்டப்படலாயிற்று.

இனி, இந்த விசாரணைச்சபையினர்க்கு உபாத்தியாயர்கள் வேதன விஷயமாக விசாரணை செய்யக்கூடிய திறமையுண்டோ என்பது ஆராயத்தக்கது. குறித்த விசாரணைச் சபையில் தலைமை வகித்திருக்கும் அரசாங்க பிரதம காரியதரிசி அரசாங்க உத்தியோகத்தர்கட்குத் தலைவரா யுள்ளவரென்பது மெய்; அதனால் அரசாங்க உத்தியோகத்தர்களின் விவகாரங்களை அவர் ஆராய்ந்து அறிந்து ஆகவேண்டியவற்றைச் செய்தலும் முடியுமென்பது நிசம்; ஆனால் அந்தப் பிரதம காரியதரிசிக்கும் அவ் விசாரணைச் சபையினர்க்கும் உபாத்தியாயர்களைப் பற்றிய விவகாரங்கள் அந்நியமாகும்; இந்த உண்மையை, குறித்த விசாரணைச் சபையினரே ஒப்புக்கொள்வதாக அவர்கள் எழுதியுள்ள அறிக்கைப் பத்திரத்தைக்கொண்டு அறியலாகும். அவர்கள் என்ன தெரிவிக்கின்றார்கள்? "அரசாங்க உ[illegible] விசாரணை விஷய[illegible]கிய காலத்தையும் பட்ட சிரமத்தையும் காட்டிலும் அதிக காலமும் சிரமமும் இந்த உபாத்தியாயர்கள் வேதன விசாரணை விஷயத்தில் உபயோகிக்க வேண்டியவர்களானோம்" என்று தாங்களே தெரிவிக்கின்றார்கள்; மேலும் உபாத்தியாயர்கள் வேதன விசாரணை விஷயம் மிகவுஞ் சிக்கலான தென்றும் ஒரு சந்தர்ப்பத்திலே தெரிவிக்கின்றார்கள் இந்த விசாரணைச் சபையினர். ஆனால், உண்மையை ஆராயுமிடத்து அரசாங்க உத்தியோகத்தர் விஷயத்திலேயே பல வகுப்புக்களும், தொகுதிகளும் சிக்கல்களும் உண்டேயன்றி உபாத்தியாயர் விஷயத்தில் ஆக மூன்று பகுப்புமாத்திரந்தானே யுள்ளன வென்பது வெளிப்படை; அன்றியும் இந்த விசாரணைச் சபையினர் தங்கள் விசாரணை முடிவில், வித்தியாதிகாரி தங்களுக்குக் காலந்தோறும் ஆசிரியர்கள் வேதன விஷயமாகச் செய்த உதவியின் பொருட்டு அவருக்கு நன்றி பாராட்டுவதாக வரைந்திருக்கின்றார்கள். அரசாங்க உத்தியோகத்தர் விஷயத்திலே, எந்தப் பகுதியின் தலைமை உத்தியோகத்தருக்காயினும் அப்படி நன்றி கூறியதாக அறிக்கைப் பத்திரத்தில் வரையப்படவில்லை; இவைகளெல்லாம் எவற்றை எடுத்துக் காட்டுகின்றன? குறித்த விசாரணைச் சபையினர் தங்களுக்கு அடாத கருமத்திலே தலையிட்டு உபாத்தியாயர்களுக்குப் பெரும்பிழையைச் செய்துவிட்டார்களென்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—108)

**தாயே! எனக்கொரு தஞ்சமுண்டோ?**

ஐயோ! என் அன்னை தந்தையர் என்னை வைத்து வளர்த்த அருமை பெருமையை நினைந்து அழுவேனோ! இல்லையேல், என் சிறிய தந்தையும் அரிய தங்கைச்சியும் என்னிடத்திற் பாராட்டி வந்த அன்பை நினைந்து அழுவேனோ, அல்லது என் சிறியதாய் என் விஷயத்திற் செய்த புறக்கணிப்பை யெண்ணி அழுவேனோ என் சிற்றப்பர் என்பொருட்டுச் செய்த கல்யாண முயற்சியை யெண்ணி யழுவேனோ; நானும் ஒருவரனைப்பெற்று இதமாக இல்வாழ்க்கையிற் காலங்கழிப்பேனெனச் சில நாட்களாகச் செய்த மனராச்சியத்தைச் சிந்தித் தழுவேனோ; அவைகளெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போய்விட இப்பொழுது எனக்கு நேர்ந்த ஆபத்தான நிலைமையை நினைத்துப் புலம்புவேனோ; பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும் என்ற பழமொழிப்படி தெய்வம் என்னை மேலும்மேலும் சோதிப்பதையிட்டு வருந்துவேனோ; ஆனைமுதல் எறும்பீறாக உலகத்திலுள்ள ஆன்மகோடிகளை யெல்லாம் பாதுகாக்கும் அகிலாண்ட நாயகியே, எனக்கு வேறொன்றும் வேண்டாம் பூர்வவினை வயத்தாற் பெண் சன்மம் எடுத்தேன்; பெண்ணாய்ப் பிறந்தவளுக்குப் பெரியது மானம்தாயே! என் மானத்திற்கு எக்காலத்தாயினும் பங்கம் வராமற் பாதுகாப்பது உன்கடன் என்று இப்படிப் பலவாறு யோசித்துக் கவலைமேலீட்டினால்:

"நீயே துணையென்று நானிருந்தேன்
எனைநீமறந்தால்
தாயே எனக்கொரு தஞ்சமுண்டோ
சங்கு சக்கரத்தாய்!
வேயீன்ற முத்துக்கும் விண்ணவர்
கோவுக்கும வேதனுக்கும்
நாயேன் றனக்கும் பதினா
லுலகுக்கும் நாயகியே"

என்ற தோத்திரத்தை மெல்லப் படித்து உள்ள முருகினேன்; கேட்டுக்கொண்டு அருகில் விழித்தபடி கிடந்த இலட்சுமி "அம்மா, கேட்கக் கேட்க இனிமையாயிருக்கிறது; இன்னுமொருகால் உந்தப் பாட்டை மெல்லப் படியுங்கள்" என்று கேட்க,நான் மேலும் படித்தேன்; "அம்மா, இப்படி இனிமையாகப் பாடுவீர்களென்பதை இந்த ஐயரறிந்தால் உங்களுக்கு மேலும் மேலும் சங்கடந்தான் நேரும்" என்று நெட்டுயிர்ப்போடு சொன்னாள் இலட்சுமி; "இலட்சுமி, என்னையிட்டு நீ கவலைப்படாதே; பெற்றார் உற்றார் அயலாரெல்லாரும் என்னைக் கைவிட்டாலும், எல்லாச் சராசரங்களுக்கும் ஏக மாதாவாகவுள்ள இறைவி, அந்தப் புவனேசுவரி, மகிடனைச் சம்மாரஞ் செய்து மன்னுயிரனைத்துங்காத்த மகாஈசுவரி என்னைமாத்திரம் சடைக்கணிக்க மறந்துவிடுவாளா? அந்த மகாசத்தியின் ஆரருள் ஆண்பாலுயிர்களிடத்திற் படிந்திருப்பதைக் காட்டிலும் பெண்பாலுயிர்களாகிய எங்களிடத்தில் அதிகம் படிந்துள்ளதென்று படித்தவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அந்த மனோன்மணியே எந்த நேரமும் வந்து எங்களுக்குக் கைதந்தருளுவாள்; இந்திராணி, சந்திரவதி, சானகி, தமயந்தி, பாஞ்சாலி முதலாகச் சொல்லப்பட்ட கணக்கிறந்த உத்தமிகளின் கற்பிற்குப் பங்கம் வாராமற் பாதுகாத்தவள் அந்தச் சிறுமானேந்தும் பெருமானுடைய இடப்பாகத்தில் அமர்ந்துள்ள ஈசுவரியல்லளோ; ஆனதாற் கவலைப்படுவது எதற்கு; எல்லாம் அவளருளாலே நடக்கும் என்று என் மனத்திற்கும் இலட்சுமிக்குஞ் சமாதானஞ் சொல்லிக்கொண்டு என்னை யறியாமல் அயர்ந்து விட்டேன்.

**"இனியேதெனக்கருள் வருமோ......"**

அடுத்தநாள் அதிகாலையில் இலட்சுமி யெழுப்ப நானும் நித்திரைவிட்டெழுந்தேன்; காலைக் கடன்களை முடித்தற்காகிய ஏற்பாடுகளெல்லாம் இலட்சுமியே செய்தாள்; ஸ்நானம் தெய்வவழிபாடு போசன மெல்லாம் காலை 9 மணிக்கிடையில் முடித்துக் கொண்டேன்; வீட்டிலுள்ளவர்களும் அப்படியே முடித்துக்கொண்டார்கள்; வீட்டிற்குரிய ஐயரின் பெயர் வெங்கடாசலமென்றும், அம்மாளின் பெயர் பாக்கிய லட்சுமி என்பதையும் இலட்சுமியே எனக்குச் சொன்னாள்; பகற் பத்து மணியிருக்கும்; நடைகூடத்திலே தம் மனைவி அயலிலே நிற்க, ஒரு சாய்மனை நாற்காலியிலிருந்த ஐயர் என்னைக் கூப்பிட்டு "மகளே, உங்கள் மங்கல சருமம் நிச்சயித்திருந்தபடி நேற்று நிறைவேறுதல் முடியாமற் போய்விட்டது: வரனுக்கு இப்பொழுது உடல்நலங் குன்றியிருக்கிறது: அல்லாமலும் உனது சிற்றப்பரில்லாத சமயத்தில் உங்கள் விவாகத்தை நிறைவேற்றி வைப்பது முறையல்ல; உங்கள் விவாக சருமத்தைத் தவணையிடுவதாக உன் சிற்றப்பருக்கு இன்றைக்குக் கடிதமெழுத உத்தேசித்திருக்கிறேன்; இங்கு உனக்கு எல்லா வகையான சௌகரியங்களும் உண்டு: இங்கிருக்கும் உன் ஆத்தாள் மிகவும் நல்லவள்; ஆன

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காணிவல்" விழா

('ஸ்ரீதரன்')

இந்த யாழ்ப்பாணத்தில் எத்தனையோ "காணிவற்" காட்சிகள் நடந்து விட்டன. ஆனால் எக்காட்சியாவது, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்றிலில் சென்ற 5-ந் தேதி தொடக்கம் 15-ந் தேதி ஈறாக நிகழ்ந்த காணிவற் காட்சியை வென்றதில்லை. இது உண்மை என்பதை இக்காட்சியைக் கண்டுகளித்தவர் அனைவரும் ஒப்புக்கொள்வர். ஆயிரக்கணக்கான பல வர்ண மின்சார தீபங்களுடன் விளங்கிய காணிவல் மன்றம் தேவேந்திர லோகம்போல விளங்கியது என்று கூறினும் பொருந்தும்.

பொருட்காட்சிகளில், கைத்தொழில் வர்த்தகப் பகுதியினரும், யாழ்ப்பாணம் மாங்கனி விருத்திச் சபையினரின் காட்சிகளும் விசேஷமானவை. விஞ்ஞானம், பூகோளம், சரித்திரம், சித்திரம் என்பன விஷயமாக ஏற்படுத்தப்பட்ட காட்சிகளில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீ C. M. குலசிங்கம் அவர்களின் விஞ்ஞானப் பகுதிக்கு முதல் ஸ்தானம் அளிக்கவேண்டும். இப்பகுதி, மாணவர்களுக்கு மாத்திரமன்றிச் சகலர்க்கும் பயன்படக்கூடிய தொன்றாகவிருந்தது.

பூமிசாத்திரக் காட்சியும் சரித்திரக் காட்சியும், மாணவர்க்கும் மற்றையோர்க்கும் பயன் தரத்தக்க முறையில் வைக்கப்பட்டிருந்தன இவற்றுக்குப் பொறுப்பாயிருந்த ஆசிரியர்கள், ஸ்ரீமான்கள் P. தம்பு, S. ஜெயவீரசிங்கம் என்பவர்களின் முயற்சி பாராட்டத்தக்கதாம்.

இங்கு அமைக்கப்பட்டிருந்த நடன கலாமண்டபத்தில் நிகழ்ந்த சங்கீதக் கச்சேரிகளிற் சில மிகவும் மேம்பாடுடையனவாக விளங்கின. சங்கீத பூஷணம் ஸ்ரீ N. ஷண்முகரத்தினம் அவர்கள் 10-7-46இல் நிகழ்த்திய கச்சேரி தனிச் சிறப்பு வாய்ந்தது. 9-7-46 இல் நிகழ்ந்த கதாப்பக் கச்சேரியில் ஸ்ரீமதி ஆநந்தநாயகம் ஜெகதாம்பிகை செய்துள்ள சங்கீதக்கச்சேரி மிகவும் ரம்மியமாகவிருந்தது: இப்பெண்மணியின் சாரீரம் முந்தியிலும் பார்க்க இப்போது ஓரளவுக்குக் கம்மியாயிருந்தபோதிலும், அவருடைய சங்கீதத்தின் தனிப்பாணி இம்மியளவேனும்குறையாது கச்சிதமாகவிருந்தது. அவருக்கு அன்று "வயலின்" வாசித்த புத்துவாட்டி ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களின் வாசிப்பு ஓர் தனிச் சிறப்பாக விளங்கியது இவர் தமது பழைய "சங்கதிகளை"க் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படாமை உண்மையில் ஏமாற்றத்துக்கிடமான விஷயம்.

11-7-46கச்சேரிசெய்தS. பரமேஸ்வரி(ஸ்ரீ கனகசபைவித்தியாசாலை)என்னும் 10 வயதுச்சிறுமியின் சங்கீதத்தைப்பற்றி ஈண்டுக்குறிப்பிடாமலிருக்கமுடியாது. பத்துவயதுதானும் நிரம்பப்பெறாதஇச்சிறுமி அநுபவம் முதிர்ந்தவித்துவான்கள்போல சங்கீதசாஸ்திரத்தில் அணுவளவேனும் பிசகாது கச்சேரிசெய்தமை எவர்க்கும்பெருமிதம் அளிக்கத்தக்க ஓர் விஷயமாகும் குமாரி மகேஸ்வரி தனது எதிர்காலத்தில் ஓர் சிறந்த சங்கீத வித்துவாம்சையென்று பெயர் எடுத்து, இந்த யாழ்ப்பாணத்துக்கே பெரும் கீர்த்தி சம்பாதித்துக் கொடுக்கமுடியும் என்பதே எமது நம்பிக்கை.

கடைசித் தினத்தன்று, இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீமதி சுபத்திராவின் இன்னிசைக் கச்சேரியைப்பற்றி ஈண்டுக் குறிப்பிடாமலிருக்கமுடியாது. அவர் ராகமாலிகையிற் பாடிய "அம்மையே அப்பா" என்ற விருத்தம், சபையில் இருந்தவர்களை அப்படியே அந்த அம்மை அப்பன் பாதங்களிற் கொண்டுபோய்ச் சேர்த்ததென்றால் அது மிகையாகாது. பக்திரசம் மிகுந்த அத்தகைய தெய்வீக விருத்தம் அது. அதனை அவர் மிகவும் அழகாகப் பக்தியுடன் பாடினார்.

இந்த நடனகலா மண்டபத்தில் நிகழ்ந்த நாடகங்கள், சிறுகதைக் காட்சிகள் என்பவற்றைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு கூறாமல்விடுகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. ஆனால் கடைசித் தினத்தன்று இராமநாதன் கல்லூரி மாணவிகளால்நடிக்கப்பட்ட குறத்தி ஆட்டம், எனது குறிப்புக்குப் புறநடையாகும்; இந்த ஆட்டத்திற் பங்குபற்றிய கன்னியர் மூவரும் எம்மை அப்படியே குறிஞ்சி நிலத்திற்குக் கொண்டுபோய், அரைமணி நேரம் எம்மை அங்கேயே வைத்திருந்து, அந்நாட்டுமக்களாகியகுறவர்குறத்தியருடன்சேர்த்து, அவர்களுடைய ஆடல்பாடல்களைப் பார்த்து மயங்கும்படி செய்துவிட்டனர் என்று கூறுதல் மிகையாகாது. உடை, நடை பாவனை, பேச்சு, பாட்டு, எல்லாம் தத்ரூபமாக அமைந்து, சிவன் பெரிதா, விஷ்ணு பெரிதா என்ற பிரச்னையைக் கிளப்பிவிட்டு, ஈற்றில் எல்லாம் ஒன்றுதான் என்ற பெரிய போதனையை இவ்வாட்டத்தின்மூலம் மிகவும் தத்ரூபமாகக் காட்டியுள்ளனர் இப்பெண்மணிகள். சினிமாக்களில்தானும் இப்படித் தத்ரூபமாக நடிக்கவில்லை என்று இதனைப்பார்த்தவர்கள் கூறியதில் மிகை ஒன்றுமில்லை என்பதே எமது அபிப்பிராயம். இந்த யாழ்ப்பாணத்தில் நாடகக்கலை அழிந்துவிட்டதோ என்று தமிழபிமானிகள் கவலையுற்றிருக்கும் இந்தக்காலத்தில்-நாடகக் கலையைக் கொலை செய்யவே கங்கணம்கட்டிக்கொண்டு சிலர் புறப்பட்டுள்ள இக்காலத்தில்—எம்நாட்டில் நாடகக்கலை இன்னும் உயிருடன் தான் இருக்கிறது. தக்க பயிற்சி கிடைக்கும் பட்சத்தில், அது நல்லாய் முன்னேறும் என்பதனைக்காட்டுவதற்காகவே இக்காணிவற் கடைசித் தினத்தில் இக்குறத்தி நாடகம் நடிக்கப்பட்டது என நினைக்கிறேன்.

அன்று கடைசியாக நடிக்கப்பட்ட மயில் நடனம் விசேஷம் பொருந்தியது. இதனை நடித்துக்காட்டிய செல்வத்துரை குணரத்தினம் என்னும் இரு சிறுவரும் மிகத் திறம்பட நடித்துள்ளனர்.

சுருங்கக் கூறுங்கால், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரிகளும் ஆசிரியர்களும், பழைய மாணவர்களும், மற்றுமுள்ளோரும், இக்காணிவல்விழாவை இத்துணைச் சிறப்புடன் நடத்தி முடித்ததற்கு நாம் கடமைப்பாடுடையோம்.

## நாம் சகோதரரே

1-ம் பக்கத் தொடர்ச்சி

யிருக்கிறது. அச் சபையில் காங்கிரஸ் தலைவர், ராஜாஜி, திரு. ராமச்சந்திரன், திரு. அரியநாயகம் ஆகிய நால்வர் இருக்கின்றனர். இலங்கையில் இந்தியத் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்தனர். அதை நிறுத்தும்படி காங்கிரஸ் போசனை கூறியது. நாங்கள் இலங்கைக்குக் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை ஒரு சகோதரத்துவ சமாஸத்தையே நாங்கள் விரும்புகிறோம்

"இந்த விஷயத்தில் நீங்கள் செய்யவேண்டிய கடமை என்ன? இருபாலாருக்கும் நல்லறிவு உதயமாக வேண்டுமென்று நீங்கள் கடவுளிடம் பிரார்த்திக்கவேண்டும். வெளி நாடுகளில் உங்கள் சகோதரர்கள் எவ்வளவு அவதிப்படுகிறார்களென்பதை அறியவேண்டியது உங்கள் கடமை.

# 'கடிதங்கள்

## பதவி வேட்டுவரின் செயல்

இந்துசாதன ஆசிரியர் அவர்களுக்கு,
ஐயா,

சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்று ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அநேகர் அறிந்திருக்கலாம். அதிலே பள்ளர், பறையர், நளவர் ஆகிய மூன்று சாதியார் சேர்ந்துள்ளார்கள். அது ஆரம்பத்திலே நல்ல நோக்கங்களைக் கொண்டு தேசிய மனப்பான்மையுடன் இயங்கிற்று வந்ததையா சோல்பரி! பிடித்தது சனியன்! மூவரும் தகிடுதத்தம் போடுகிறார்கள். எதற்கு? அரசாங்கசபைக்கு. எல்லா ஸ்தாபனங்களையும் பிடித்தாட்டும் பதவிப்பேய் இதனையும் பிடித்தது தெருவுக்கொரு சங்கம், வீட்டுக்கொருசங்கம், குடும்பத்துக்கொரு சங்கமென காளான்கள் முளைப்பது போல் கிளம்பின, காரணமென்ன? பதவி வேட்டைக்காரரின் சூழ்ச்சி பெரிய சங்கத்திற் பலிக்காமையே. சங்கங்களின் பேரால் தங்களைக்காட்டிக்கொள்ள விரும்பியவர்கள் ஷை காளான் சங்கங்களை அமைத்தார்கள். சங்கங்கள் தோன்றுவது சுதந்திர தாகத்தின் அறிகுறிதான். அவை பெரிய சங்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலிப்பதாயிருந்தாற்றான் அடிப்படையான விடுதலைக்கு வழி பிறக்கும். சங்கமென்று சரியாக உச்சரிக்கத் தெரியாதவர்கள் நிர்வகிக்குஞ் சங்கங்கள் வெட்டி விழுத்தத்தான்போகின்றன. ஆளை ஆள்வெட்டி விழுத்தும் நிலைமையைத்தான் அவை ஏற்படுத்தும்போலும்.

பள்ளர் பெரியவரோ? நளவர் பெரியவரோ? பறையர் பெரியவரோ? என்ற ஆர்ப்பாட்டம் வானைப் பிழக்கின்றது யாழ்ப்பாணத்தில் 7-7-46 ந் தேதி நடைபெற்ற சிறுபான்மைத் தமிழர் பகிரங்கக்கூட்டம் ஐந்து சங்கங்கள் சேர்ந்து நடாத்திய மாபெருங் கூட்டமாம். குறித்த சங்கங்கள் அவ்வளவும் ஏறக்குறைய சால் மைலுக்குள் இருக்கின்றன ஆகவே அவைகளின் பெருமையைச் சொல்லவா வேண்டும்.

அன்பர்களே ஆரியபத்திராஜுவின் வாலைப் பிடிக்கவேண்டாம் அவர் ஒரு சிங்கள வகுப்புவாதி. ஒரு தமிழ வகுப்பு வாதியைக் கண்டிக்க அவருக்கு என்ன யோக்கியதை உண்டு? என்று கேட்கிறேன்? சந்தர்ப்பம் தமிழனை வகுப்பு வாதியாக மாற்றலாம். ஓர் சிங்களர் வகுப்பு வாதியா யிருக்கவேண்டிய அவசியமில்லையே.

சோல்பெரிக்கூட்டத்தில் பிரதிநிதித்துவத்துக்குக் கெஞ்சினீர்கள். அது நேரே தராமல் கானல்நீரைக் காட்டி அங்கே பிரதிநிதித்துவம் இருக்கிறது போங்கள் என்றது. தொகுதி நிர்ணயக் கொமிஷனிடம் போனீர்கள். ஒன்றாய்ப் போனீர்களா? இல்லை. அந்தச் சங்கம், இந்தச் சங்கம், குடும்பச் சங்கம் என்று உங்கள் பலவீனத்தைக் காட்டினீர்கள் எந்தவித யோக்கியப் பொறுப்புமற்றவர்களைப் பிடித்து சாதியின் பேரால் தலைப்பாகை கட்டுகிறீர்கள், சிரிப்பதற்கும் விஷயம் வேண்டுமல்லவா?

பொறுத்து நிற்கத் தகுதியற்ற ஒரு பெலவீனமான சமூகத்திலிருந்துகொண்டு பதவி சாதிப்பூசல் என்பவற்றைக் காவிக்கொண்டா முன்னேறப்போகிறீர்கள்? வீணர்களையும் வெறியர்களையும் ஒதுக்கிவிட்டு உங்கள் மகாசபையை ஸ்திரப்படுத்தி உண்மையாக உழையுங்கள். ஒரே குரலில் கூச்சல் போடுங்கள். வெற்றி கைமேற் கிடைக்கும்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
மெய்ப் பொருள் காண்பதறிவு"

எனையோர் பார்த்து "சாதிப்புத்தியைக் காட்டுறார்கள்" என்று பரிகசிக்கத்தக்க நிலையில் உங்கள் காரியம் நடவாதுவிட்டால் அதுவே பரம திருப்தி. உங்களுக்கு வரும் நன்மையுந்தீமையும் பொதுவானதே. பள் நன்மை, நள நன்மை என்றுவது, பள்நெருக்கடி, நளநெருக்கடி என்றுவது பாகுபடுத்திவரா.

இங்ஙனம்
"தியாகி"

வதிரி
13 7—46

## நிலர்வரைத் திட்டத்தை எதிர்ப்பது யார்?

இந்துசாதன ஆசிரியர் அவர்களுக்கு:
ஐயா,

யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம் நிலாவரை நீர்ப்பாய்ச்சல் திட்டம் என்பன நம் யாழ்ப்பாண நாட்டிற்குக் கிடைத்த அரும்பெருஞ் செல்வங்களாகும். நிலாவரைத் திட்டத்தைச் சில சிங்களப் பிற்போக்காளர்கள் எதிர்த்து வந்ததாகப் பத்திரிகைகளிற் காணப்பட்டது. மேற்படி எதிர்ப்பைக்கண்டு இக்காட்டு வாசிகள் கொண்ட ஆவேசமும் புத்துணர்ச்சியும் போற்றக்கூடியதாகும். இவ்வெதிர்ப்புச் சிங்களரால் மட்டுமல்ல யாழ்ப்பாணத் தமிழர் சிலராலும் செய்யப்பட்டு வருவதால் இப்போது அறியக்கிடக்கின்றது. அதுவும் நாட்டு அபிவிருத்தியில் மிக ஊக்கமுடைய ஓர் (கிறிஸ்தவ) அச்சுவேலிப் பிரமுகரே தலைமை வகித்து எதிர்ப்பதாகத் தெரிகிறது. நிலாவரை நீர்ப்பாய்ச்சல் வேலையைக் குழப்பி அதை அரசாங்கம் கைவிடும்படி செய்து பின்பு தான் அதையெடுத்து நடத்திச் செல்வாக்கைத் தேடிக்கொள்வதற்காகவே அவ்விதம் செய்கிறாராம். அதுமட்டுமன்றி நிலாவரையிற் ரேன்றிய சோயிலையும் கிறிஸ்தவ கோயிலாக்கத் திட்டம் போட்டிருக்கிறாராம். இவ்வித முயற்சி யாழ்ப்பாணக் கமக்காரருக்கும் பிரதானமாய் இந்துக்களுக்கும், மிகுந்த ஆத்திரத்தைக் கொடுக்குமென்பதற் கையமில்லை.

இவ்வித பிற்போக்கு எண்ணங்களால் நம் தமிழ் மக்களின் ஒற்றுமைக் குறைவு அம்பலப்படுத்தப்படுகிறது. தமிழ்ச் சாகியத்தாரிடையே அதுவும் பிரதான பயனைப் பெறும் யாழ்ப்பாண வாசிகளிடையே இவ்வித பிரிவினையும் எதிர்ப்பும் இருக்கையில் சிங்களத் தலைவர்கள் சூழ்ச்சி செய்வது மிகையாகாது. அனேக காலமாய்க் கவனிப்பாரற்றுக் கிடந்த நிலாவரையை முன்னடியே இக்கிறிஸ்தவப் பிரமுகர் பயன்படுத்தியிருக்கலாம் அதனால் தனக்கு வேண்டிய பெயரையும் புகழையும் சம்பாதித்திருக்கக்கூடும். அதை விடுத்து அரசாங்கம் செய்ய முன்வந்துள்ள இந்நேரத்தில் முட்டுக்கட்டைபோடுவது மிகவும் அநாகரீகத்தனமாகும். கடைசியாய் தானுஞ் செய்யாது அரசாங்கத்தையும் செய்ய விடாது உள்ளதையுங் கெடுத்தானுங் கொள்ளிக்கண்ணன் என்பது போலவே முடியுமென்பதற் கையமில்லை.

இங்ஙனம்,
சி. எஸ். துரை

அச்சுவேலி
17—7—46

## இன்னும் மூன்று வருஷத்துக்கு

உலகில் தற்போதுள்ள உணவுப்பஞ்சம் நீங்குதற்கு இன்னும் 3 வருஷங்கள் வரை செல்லுமென அமெரிக்க ஜனாதிபதி மிஸ்ரர் ட்ரூமன் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்
### வலிகாமம் - கிழக்குப்பகுதி

சைவ வித்தியா விருத்திச் சங்கக் [இந்துபோட்]
காரியதரிசியும், அப்புக்காத்துமாகிய
கோப்பாய்

**திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம்**
அவர்கள்

புது அரசியல் திருத்தப்படி நிறுவப்படும் இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவிக்கு ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிறார்கள்.

பிரிவு: கீழே காட்டப்படும் கிராமச்சங்கப் பகுதிகள்
(1) அச்சுவேலி (2) புத்தூர், (3) உரும்பராய், ஊரெழு, நீர்வேலி (4) கோப்பாய், (5) நல்லூர் (6) கொக்குவில், கோண்டாவில்,

Mis 119 16—26






இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எங்கும் கியாதிபெற்ற எமது **ரேடியோ பீடிகளையே** எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

எல்லாஊர்களிலும் கிடைக்கும்
**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு ஷை நூல் ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்**
வெளியீடாக அச்சிடப்படுகின்றது.

கூடியசீக்கிரம் வெளிவரும்

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி யூலை 20

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வி எஸ் சக்ரபாணி வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 கமலா ராயன் பாட்டு 8.30 சித்ரகானம் 9 முடிவு.

1 வி எஸ் சக்ரபாணி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 திருவாலி ஆர் எஸ் மணி பாட்டு 2.45 முடிவு.

மாலை: 5 திருவாலி ஆர் எஸ் மணி பாட்டு 5.40 திருமந்திர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 லீலா சேஷசாயி பாட்டு 7-15 வாழ்வின் உயர்வு 7.20 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (டி பிருந்தா, முக்தா பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஜி ராகவன் பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10 30 முடிவு.

### ஞாயிறு யூலை 21

காலை: 7-15 ஆரம்பம் 7.20 தமிழ்ச் செய்திகள் 7-30 எஸ் ஜி கோமதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருப்பத்தூர் ஆர் ராமநாத பாகவதர் பாட்டு 8 30 இசைப்பயிற்சிப் பாட்டுகள் 9 முடிவு.

12 மீரா இசைத்தட்டுத் தொகுப்பு 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 மாதர்பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 திருப்பத்தூர் ஆர் ராமநாத பாகவதர் பாட்டு 2.30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 எஸ் ஜி கோமதி சங்கர நாராயணன் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி ஆர் கல்யாணகிருஷ்ணஐயர் வீணை 7-15 விரைத்திற்கு உரியவை 7-30 தமிழில் செய்திகள் 7-45 எம் ஏ கல்யாண கிருஷ்ண பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடக இசை 9-25 அறிவிப்புகள் வானிலை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 டெல்லியில் உள்ளபடி 10.10 டி ஆர் கல்யாண கிருஷ்ண ஐயர் வீணை 10.30 முடிவு.

### திங்கள் ஜூலை 22

காலை 7-15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 என் எஸ் வல்லவரங்கப் பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 அழகர் புத்தூர் இசைத் தொகுப்பு 8-30 எஸ் பி மதுரம் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எஸ் பி மதுரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எஸ் பி மதுரம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 என் எஸ் வல்லவரங்கம் பிள்ளை நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 7-15 விவாதத்திற்கு உரியவை 7 30 தமிழில் செய்திகள் 7-45 பாலக்காடு ராம பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி எஸ் வெங்கடாசலம் பிள்ளை வயலின் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசை வேளை 10-30 முடிவு.

### செவ்வாய் ஜூலை 23

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 என் ஆர் கிருஷ்ணையர் புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ராஜம் புஷ்பவனம் இசைத்தட்டு 8-20 கே நடராஜன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே எம் மணிராஜன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கே எம் மணிராஜன் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 டி ஆர் விச்வநாதய்யர் பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி ஜே கோவிந்தன் இசைத்தட்டு 7-15 தென்னிந்தியாவில் சிறு தொழில்கள் பேச்சு 7-30 தமிழில் செய்திகள் 7.45 என் ஆர் கிருஷ்ணையர் புல்லாங்குழல் 8 கந்தர் அனுபூதி 8.20 டி ஆர் விச்வநாதய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 பதம் ஜாவளி 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.


## குடை மார்க்ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

### கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினால் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால் வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினால் உடையாது. மழையினால் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செதய் ஆராய்ச்சியின் பயனாவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஏஜென்ஸ்'
ஜே. சேரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3— 12-9(வெ)



## விளம்பரம்

கிளிநொச்சிக் கலனிக் குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் 2,000,000 சுட்ட செங்கல்லுகள் கொடுப்பதற்கு 1946-ம் ஆண்டு ஜூலை மாதம், 30-ந் திகதி பகல் 12 மணிவரைக்கும் கொழும்புத் திறைசேரியில் ரெண்டர் போட் சேர்மன் அவர்கள் ரெண்டர் ஏற்றுக்கொள்வார். ரெண்டர்கள் ரூபா 25 கட்டி வடமாகாண அரசாட்சி ஏசண்டரிடம் பெற்றுக்கொண்ட போம்களில் எழுதப்படவேண்டும் மறு விபரங்களையும் அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(G 45, 16, 19, 23-7-46)



## இதோ வந்துவிட்டது!

வீட்டுத் தளபாடங்கள் செய்தற்கான அருமையான பிரம்பு வந்துவிட்டது, விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்துக்கு எழுதுக:

The Overseas Commercial
(Cey'on) Agency Ltd.
P. O. Box No. 44
Colombo.

(Misc. 118. T, 16 & 19-7-46)



மிகச் சிறந்த புதிய
## ஆர்மோனியங்கள்



விலைக்கிருக்கின்றன
**எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்**
சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்
**கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கொம்பனி,**
484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9) (வெ)



## தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
### சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சிசா மூலிய செலவு வேறு.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதான்மான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேகவியோகம்

## திரு. S. பொன்னுச்சாமியவர்கள்

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை ஆங்கில தமிழ் இந்துசாதனப் பிரசுரங்களென்னு மிவைகளின் 'மனேஜர்'' முகாமைக்காரனுகச் சென்ற 4 வருடங்களாகக் கடமையாற்றிவந்த திரு. எஸ். பொன்னுச்சாமி அவர்கள் சிலகாலமாகத் தம்மைப் பீடித்து வருத்திய நோய் காரணமாக, சென்ற செவ்வாய்க்கிழமை (16-7 46) முத்தியானத்தின் மேல் வண்கிழக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் கணித்தாகவுள்ள தமது இல்லத்தில், மனைவி மக்கள் கதற, சுற்றமித்திரர் அயலார் பிரலாபமுற, இவ்வுலக வாழ்வை யொருவினர்: இவர் சைவசமய ஒழுக்கத்தோடு கூடிய உத்தம குடும்பத்திலே பிறந்து தமிழும் ஆங்கிலமுங் கற்று, இலங்கையரசினரின் வனபரிபாலனப் பகுதியில் உயர்ந்த உத்தியோகம் பார்த்து, உபகார வேதனம் பெற்று வந்தவர்: சைவத்தொண்டிலும் சமயத்தொண்டிலும் பங்குபற்றித் தம்மால் இயன்றவரை யுழைத்து வந்தவர் தருமஞ் செய்யு மியல்புடையவர்; மேலே காட்டப்பட்ட பிரகாரம், யாழ்ப்பாணஞ் சைவப்பிரகாச யந்திரசாலை பத்திரிகைப் பிரசுரங்களென்னு மிவற்றின் அதிபராக விருந்து கடமையாற்றிய காலத்தில், இவர் அதிக நேர்மையோடும் அபிமானத்தோடும் தம் கடமையைச் செய்து வந்தார்; யுத்தகாலத்திலே பத்திரிகை நடத்துவதும் அச்சியந்திரசாலையைப் பரிபாலிப்பதும் இலகுவான கருமமல்ல வென்பதைஅவற்றில் ஈடுபட்டுழைப்போர் நன்குணர்வர்; ஆயினும் திரு. பொன்னுச்சாமியவர்கள் தம்மீது யாழ்ப்பாணஞ்சைவ பரிபாலன சபையார் பொறுப்பித்த கடமையைத் தம்மாலியன்ற திறமையோடு நடாத்திவந்தார்; இப்படியான தரும தாபனங்களில் தாம் ஈடுபட்டு உழைத்தல் வேண்டுமென்ற ஆசை இவரிடத்தில் மரணபரியந்த முண்டெனலாம்; இவருக்கு இறக்கும்போது வயசு 62. இவர் மரணம் பெரிதும் அநுதாபப்படத்தக்கது; ஈமக்கிரியைகள் அடுத்தநாளாகிய புதன்கிழமை பிற்பகல் புத்திரராற் பல சுற்றமித்திரர் அயலார்சமூகத்தில் வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் மயானத்தற் சிறப்பாகச் செய்யப்பட்டன; இவரது ஆன்மா சாந்தியடைக.

### ஸ்ரீ ஆச்சார்யஸ்வாமிகள்

பம்பாய் சர்வதேச சகோதரத்துவ ஸ்தாபனத்தின் ஸ்தாபகரான ஸ்ரீ எஸ டி. ஆச்சாரிய ஸ்வாமிகள் இப்போது யாழ்ப்பாணத்தில் நிற்கிறார். அவர் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் "இராமாயணம்'' என்பது பற்றி ஓர் சொற்பொழிவு செய்வர். நாளை சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு "நித்தியவாழ்க்கையில் சமயம்'' என்னும் பொருளபற்றி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இன்னோர் சொற்பொழிவும் செய்வார்.

ஷை ஸ்வாமிகளைக் கொண்டு சொற்பொழிவுகள் செய்விக்க விரும்புவோர், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக் காரியதரிசியுடன் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

### வடபகுதி ஐக்கிய வருடாந்த மகாநாடு

ஷை மகாநாடு யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் 24-7-46 காலை 10 மணியளவில் ஆரம்பமாகுமென்றும்; மகாநாட்டை விவசாய மந்திரி மிஸ்டர். சேனநாயக்கா ஆரம்பித்து வைப்பார் என்றும் அறிகிறோம்

### நாளை வருகிறார்கள்

இலங்கையில் உள்ள இந்தியர் நிலையை விசாரித்தறிவதற்காக இந்திய தேசியமகாசபையினால் நியமிக்கப்பட்டுள்ள உபசபையின் அங்கத்தவர்களான ஸ்ரீ இராமச்சந்திரனும், ஸ்ரீ அரியநாயகமும் நாளை (சனி) ஆகாய விமான மூலமாக இலங்கைக்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

தால் அவளையே உன் தாயாகப் பாவித்து விசுவாசமாக நடந்து கொள்; எங்கள் பணிப்பெண்ணிருக்கிறாளே இலட்சுமி, அவள் எங்கள் குலத்திற் பிறந்திலளாயினும் பிராமணப் பெண்களுக்குரிய குணம் நடையெல்லாமுடையவள்; சூதுவாதற்றவள், பொய்யறியாள், விசுவாசமுள்ளவள்; அவளிடத்தில் நீ என்ன சொன்னாலும் அவள் உடனே உனக்கு வேண்டியவற்றைச் செய்வாள்: அவளால் முடியாதவைகளை இங்குள்ள ஆத்தாளிடஞ் சொல்லலாம்'' என்று இப்படி அன்பாகச் சொல்லிவிட்டுப் பின்னரும் என்னைப் பார்த்து, "அடியம்மா உனக்குச் சங்கீதம் வருமோ? பரதநாட்டியம் தெரியுமோ? இந்தக் கல்விகளெல்லாம் காலத்திற்கேற்ற கோலமென்ற விதமாய் இக்காலத்தில் இல்லறம் நடத்தவிருக்கும் பெண்களுக்கும்இன்றியமையாதன'' என்றார "ஐயா, பூரணமாக நான் அவைகளு ளொன்றையும் பழகிக்கொள்ளவில்லை; அற்பமாக அறிவேன்என்றேன்''; அற்பமேனும் அறிந்திருப்பது நல்லது; இங்குசங்கீதம் பயிற்றுதற்கும் பரதநாட்டியம் கற்பித்தற்கும் ஆகவேண்டிய சங்கீத வித்துவானும் பரதசாத்திர உபாத்தியாயரும் என் ஆதீனத்தில் இருக்கிறார்கள்; அவர்கள் மூலமாக அந்த இரண்டினையும் உனக்குப் பயிற்றி வைக்கிறேன்; இப்பொழுது ஒரு பாட்டுப் படியம்மா கேட்போம்'' என்றார். இனியேதெனக்குனருள் வருமோ எனக்கருதி ஏங்குதே நெஞ்சம் ஐயோ! இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே....'' என்ற தாயுமானவர்பாடலை இராகமாலிகையாகப் படித்தேன்: ஐயர் கேட்டு ஆநந்தமடைந்து நல்லாயிருக்கிறதடியம்மா உன் சங்கீதம் என்றார். இப்படி அவர் சொல்லிக்கொண் டிருக்கும் போது யாரோ அவரைக் காணும்படி தலைவாசலில் வந்திருப்பதாக இலட்சுமி வந்து தெரிவிக்க, ஐயர் எழுந்து தலைவாசற்பக்கம் போனார்.

### கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கைநன்றே

சில நாட்கள் செல்ல, சங்கீத வித்வானொருவரும் பரதநாட்டியம் பழக்குபவரொருவரும் நான் இருக்கும் வீட்டிற்கு வந்தார்கள்; ஐயர் என்னைப் பார்த்து அவர்களிடம இருவித்தைகளையும் கிரமமாகத் திறமையோடு கற்றுக் கொள்ளும்படி எனக்குச் சொல்ல, நான் ஆம் என்று சொல்லிவிட்டு என் ஆத்தாளிடம் போய் விஷயத்தைச் சொன்னேன்; ஆத்தாள் மிகவும் நல்லவள்: என்னிடத்தில் அதிக அன்புள்ளவள்: என்னைத் தன் சொந்தமகள்போலப் பாவித்துப் பேணி நடப்பவள்; அவள் என்னை அன்புடன் பார்த்து 'மகளே, நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம்: முதல் ஆண்டவன் துணை, இரண்டாவது நான் இருக்கும்வரையில் நீ இங்கிருக்கும் வரையில் உனக்கு எவ்வகையான பிழையையும் எவரேனுஞ் செய்ய விடமாட்டேன்'' என்று உறுதியாகச் சொன்னாள்; ஆத்தாள் அப்படிச் சொன்ன மாத்திரத்தே எனதுள்ளத்துட் குடியிருந்த கவலையெல்லாம் ஆதவனைக் கண்ட பனிப்படலமென என்னைவிட்டு அறவே யகன்றன: "அம்மா, உங்கள் சொற்படி செய்கிறேன் என்று சொல்லி ஆத்தாளுக்கு நமஸ்காரஞ் செய்து விட்டு உபாத்தியாயர்களிருக்குமிடத்திற்குப் போனேன்; முறைப்படி அவர்களைப் பணிந்து, அவர்களுட் சங்கீத ஆசிரியர் இருமென இருந்து சொல்லெனச் சொல்லி, அவரிடத்திற் சங்கீதத்தைப் பயின்றேன்: அவர் சங்கீத சாகித்தியத்திற் சிறந்தவ ரென்பதை முதனாளே யுணர்ந்துகொண்டேன்; பின்னர் பரதநாட்டியத்தையும் அதற்காகிய உபாத்தியாயர் சொல்லித்தரப் பயின்றேன்; அதன்பின் ஐயர் அந்த இடத்திற்கு வந்து என்னையிட்டு அந்த ஆசிரியர்களிருவரிடத்தும் விசாரிக்க, அவர்கள் "இந்தப் பெண்ணுக்குச் சங்கீத அறிவும் பரதநாட்டியப் பயிற்சியும் அற்பமாகவுண்டு: மேலும் இரு வித்தைகளிலும் ஆர்வமுண்டெனத் தெரிகிறது; கிரமமாகச் சங்கீதத்தையும் நாட்டியத்தையும் எங்கள் போன்ற உபாத்தியாயர்களிடத்திற் பயின்று வந்தால் காலகதியில் இப்பெண் இருவித்தைகளிலும் நிபுணையாவாள் என்னுங் கருத்துப்பட ஏகோபித்துச் சொன்னார்கள்; ஐயருங்கேட்டுமகிழ்ச்சியடைந்தார். அன்று தொடக்கம் நான் இருவித்தைகளையும் கற்றுவந்தேன்' என் ஆத்தாளும் என்னைப் பார்த்து "மகளே, சோர்வடையாதே, படிப்பதை அவதானமாக ஆர்வத்தோடு படித்துக்கொள்: கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கைநன்றே என்பது நீ யறியாததல்ல; இந்த வித்தைகள் உனக்குப் பிற்காலத்திற் பெரும்பயன் தருதலுங் கூடும்'' என்று அன்புடன் சொன்னாள்

### "நடக்க விருந்தால் நடக்குந்தானே''

அந்த வீட்டில நான் போய்ச் சேர்ந்த நாட்களில் என் மனத்திலிருந்த கவலை என் ஆத்தாள் காட்டிய அன்பினாலும் அவள் அன்றன்று சொல்லிவரும் தேறுதல் வார்த்தைகளினாலும் ஒருவாறு குறையத் தொடங்கின' விவாகமும் நடக்கவிருந்தால் நடக்குந்தானே என்ற ஆறுதலான எண்ணம் என்னுள்ளத்திற் பிறந்தது. ஆனால் என் சிற்றப்பரையும் தங்கைச்சியையும் பற்றிய கவலை மாத்திரம் என் சிந்தையை விட்டகலாதிருந்தது. சிற்றப்பர் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தவரல்லரோ; அவருடைய நோய் மாறியிருந்தால் இதுவரையில் அவர் இங்கு வந்திருப்பாரே; நோய் இன்னமும் சுகப்படவில்லையோ இல்லையேல் இந்த ஐயர் இன்னமும் அவருக்குக் கடிதமெழுதவில்லையோ: இவர் எழுதியிருந்தால் அவர் பதிலாயினும் எழுதாமல் விடமாட்டாரே; நான் இருக்கும் இடந் தெரியாமல் அவர் சிரமப்படுகிறாரோ: இந்த ஐயரெனிலோ பொய்யொழுக்கம் பூண்டவர்; இவர் சொல்வதில் எப்படி நம்பிக்கை வைப்பது? என் தங்கை என்னை ஒரு நிமிஷமும் விட்டுப் பிரிய மனம் பொறுதவள்; அவள் என்னைப் பிரிந்தமையினால் துயரப்படுவாளே! அவர்களிடத்திலிருந்து ஒரு கடிதமாயினும் கிடைத்துவிட்டால் நான் ஒருவாறு மனம் ஆறியிருக்கலாமே யென்று இப்படிக் கவலைப்பட்டேன்; என் கவலையை இடையிடையே இலட்சுமிக்கு மாத்திரம் சொல்லி ஒரு அளவிற்கு மனமாறுவேன்; அவளும் எனக்குத் தேறுதல் சொல்லுவாள். இப்படியாக ஒரு தினம் பிற்பகல் வேளையில் நான் இருக்கும் வீட்டிற்கு யாரோ ஒரு கிராமத் தலைவர் வருவதாகவும், அவரை வரவேற்று உபசரிப்பதற்காகிய ஆயத்தங்கள் செய்யப்போவதாகவும் இலட்சுமியெனக்குச் சொன்னாள். அப்படியான ஆயத்தங்கள் நடப்பதை நானும் அவதானித்தேன். (வரும்)

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்சவம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் காரணமாக 1946 ம் ஆ ஆகஸ்டுமீ 2உ தொடக்கம் 28உ முடிய, நிதமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 12 மணி வரையும் கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் தெருப் பக்கம் பழைய சந்தைத் தெருப்பக்கம் என்னு மிவை மார்க்கமாகப் போகும் எல்லா வகை வண்டிகளும், அப்பாதைகளை ஒழித்து உவைமன்தெரு, நாவாந்துறை வீதி, நல்லூர் முதலாம் இலக்கக் குறுக்குத் தெரு என்னும் இவைகள் மூலமாக வே போக்குவரவு செய்ய வேண்டுமென இதனாற் பிரசித்தம் செய்யப்படுகின்றது

(ஒப்பம்) S. W. O. டீ சில்வா,
வடமாகாணப் பொலிஸ் தலைவர்.

பொலிஸ்தானம்,
யாழ்ப்பாணம்:16 7-46.

Mis I.6, 19 & 23-7-43.


# கர்ணாமிர்த சங்கீதக் கச்சேரி

1946-ம் ஆண்டு ஜூலைமீ 31உ புதன்கிழமை இரவு 7 மணி தொடக்கமாக



யாழ்ப்பாணம்

இந்துக்கல்லூரி மண்டபத்தில்

மதுர கீதவாணி

## N. C. வஸந்தகோகிலம்

அவர்களின் ஒப்புயர்வற்ற சங்கீதக் கச்சேரி

பிரவேசச் சீட்டு விபரம்: ரூபா 25. 15. 10. 5.

கீழ்க்கண்ட இடங்களில் பிரவேசச் சீட்டுகளை முன்னதாகவே பெற்றுக்கொள்ளலாம்

1 யாழ்ப்பாணம், அப்போதிக்கரீஸ், பெரியதெரு, யாழ்ப்பாணம்
2. ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை காங்கேசன் துறைறோட் யாழ்ப்பாணம்.
3. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. 4. யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி

Mis 12, 19—30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகரின் திருவாசகம்

(A. செல்வநாயகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன்)

(முற்றொடர்)

இதன் சாரம் பொதுவாகப் பூ என்றால் தாமரைமலரைக் குறிப்பதுபோல பா என்றால் அது உன் பாட்டினைப் பொருள்கொளும். ஆனால் மாணிக்கவாசகரின் திருப்பாட்டுக்கே திருவாசகமென்றும் பெயர் வந்தது. சிலவாண்டுகளுக்குமுன்னிருந்த திருவனந்தைச் சுந்தரம்பிள்ளை தமது 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூற் பாயிரத்தில் திருவாசகத்தின் பெருமையை "மனக்கரைந்து மலங்கெடுக்கும்" என்று குறிக்கு முகத்தால் வாசகத்தைப் பயில்வோர் சிவனடிக்கீழ்ச் செல்வர் என உணர்த்தினர். இவ்வருமையான வாசகத்தின் பயன்களை நன்றுயனுபவித்த திருவருட்பிரகாச வள்ளலார் "வான்கலந்த மாணிக்க வாசகநின்" என்ற பாவால் தான் உண்மையைக் கண்டனுபவித்த இன்பத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். இதனைப் படிப்பதின் பயனை ஆராய்வாம்.

"தொல்லை யிரும்பிறவிச் சூழும்
தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே
எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ
ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்."

என்னும் பாட்டானது திருவாசகப் பழமையாகிய பிறவித்தளையைச் சேதித்து, ஆணவமாதிய மலக் குறும்புகளையும் அதனால் வரும் துன்பங்களையும் அறவே ஒழித்து பேரானந்தத்தைத் தரவல்ல வீட்டு நெறியை அளிக்குமென்றார். பத்திச்சுவை முற்றியிருப்பதால் தேனென்றும் சிவபிரானது அருள் செறிந்து இருப்பதால் "தளை நீக்கி அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியது" என்று ஆன்றோர் பாடியருளினர் சுவையிலும் பயனிலும் பொருளிலும் ஒப்புயர்வற்ற வாசகத்தைக் கல்லாத தமிழ்ச் சைவர்கள் மறுமைநலத்தை இழப்பதுமன்றி இம்மையில் அநுபவிக்கத்தக்க இன்பங்களுட் பெரும்பகுதியை அநுபவியாமல் கிறுபாகியவராவர். கடைசியாய் நாம் ஏன் பிறந்தோம்; தோற்றிய காரணம் யாது? என்று சற்றே உற்றுநோக்குவீ வாசகம் செய்யும் தொண்டு நன்கு புலப்படும். மானிடப் பிறவி நமக்கு அரிதிற் கிடைத்த செல்வமன்று. "அரிதரிது மானிடராதலரிது" என்று நம் தமிழ்ப் புலவர் கூறிப்போந்தார். ஒருகால் புல்லாயிருந்தோம், பின் பூடாயிருந்தோம். இதனையே வாசகப்பெருமானும்:

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப்பாம்
பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்கண
ங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவ
ராய்

என்று பலவகைப்பட்ட பிறப்புக்களை கூறியுள்ளார். இவ்வகைப்பட்ட பிறப்புக்களை நாம் பிறந்துழலல் வேண்டும். அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்ற நால்வகை யோனியும் தேவர், விலங்கு, புள், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, மானிடர் என்ப எழுவகைத் தோற்றமுமாகிய எண்பத்திநான்கு இலக்கம் யோனி பேதத்தும் பிறந்திறந்து இளைத்த புண்ணிய மிகுதியால் மானிடப்பிறவி வாய்த்தது. இப்பிறவி வந்த காரியத்தை முடிப்பதற்குரிய பிறவி இப்பிறவியே. இரண்டறக் கலக்கும் சிவானுபூதிச் செல்வம் பெறக்கூடிய பிறவி. மற்றப் பிறவியில் இக்காரியம் கைகூடமாட்டாது. "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்று தாயுமான சுவாமிகளும்

பிறவியில் அருமையைக்கூறியுள்ளார். பல பிறவிகளில் மானிடப் பிறவிதான் அரிதிற் கிடைப்பது என்பதை "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் அரிது, அரிதுகாண்" என்னும் பாவால் கூறியுள்ளார்.

'எறியுங் கடலின் நுகத்துளையில்
இளமையாக் கழுத்துப் புகுவதுபோல்
பொறிவெம் பிறவி பலகோடி
புகுந்து விலகி யெனப் பிறப்பால்"

இப்படியெல்லாம் என்பிறப்பான் திருவருளின் ஆணைவழிநின்று, சிவதொண்டு செய்து கதியடைந்து திருவடிக்கீழ்ச் செல்லுவதற்கன்றோ! கடவுள் ஆன்மாக்களிடத்து தனது கிருபையைப் பகுத்தறியும் விசேட செயற்கையறிவுடைத்த நாமும் விண்ணவர் தாமும் மண்ணவராகிச் சிவத்தொண்டு செய்யவும் வேண்டுமென்பது சொல்லவும் வேண்டுமோ! மானிடயாக்கையிலுள்ள ஒவ்வோர் உறுப்பும் இறைபணி செய்வதற்கே உரியன என்பதை வலியுறுத்த அப்பர் சுவாமிகள் 'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்" என்றார். வாசகப் பெருமானும்

"சிந்தனை நின்தனக் காக்கி
நாயினேன் தன்கண்ணிணை நின்
திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும்
அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்க"

என்கிறார். ஆகையால் இவ் வுடலழிந்துபோகுமுன்னரே பரமசிவனை அல்லும் பகலும் அனவரதமும் நினைந்து மகிழ்ந்து பேரானந்தத்தை யடைய வேண்டியது நாம் எடுத்த பிறவியின் முதற்கடமை. பிறப்பவர் இறப்பது திண்ணம். அவர் நம்மைக் கைவிடுவாரால் இவ்வுடம்பெடுத்த பயனை அநுபவியாமல் அப்பர் சொன்ன பிரகாரம் 'கடலை வழ்வ கொண்டேன். ஆவியார் போவதுமுன் அயரா அன்பினால் அரன் கழலைச் சேரவேண்டும் இக்கருத்தினைச் சான் அப்பர் சுவாமிகளும் "மழக்கயோம் இனியோம்" என்று கூறியுள்ளார். இவ்வுடம்பழிந்தால் மறுஜென்மத்திலும் உடன்வாராது. அதை விரும்பி வேறு ஜெந்துக்கள் இருக்கின்றன. இதனை யுற்றே பட்டினத்தடிகளும் "எரியெனக் கென்னும் புழுவோ தனக்கென்னும் இந்த உடலைப் பிரியமுடன் வளர்த்தேன்" என்ற பாவால் கூறியுள்ளார். ஆன்மேல் பக்திவர அவரருள் வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பதினால் இதனை யறியலாம். 'அயரா அன்பினால் அரன்கழல் செலுமே" என்ற பாக்கியத்தை நாம் சிந்தித்து உற்றுநோக்குதல் வேண்டும். அடியார்களும் அன்பினைப் போற்றுகிறார்கள். சுவாமிகளும் 'ஆடகசீர் மணிக்குன்றே" என்று இரங்கி இரந்து உருகுகின்றார். ஏழையடியேன் இரவும் பகலும் என்று வாசகுச் செய்கின்றார் அப்பர்சுவாமிகளும் நனவிலும் கனவிலும் நம்பா உன்னை மனவிலும் வழிபடமறவேனம்மானே' என்று பாலகனாகிய சம்பந்தர் முழங்குகின்றார். எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை என்கின்றார் சுந்தரர். பட்டினத்தடிகளும் நின சீரடிக்கே மாறாதபான முற்றானம் தம மேற்கொள்ள பார்பிற் கண்ணீர் ஆருயப் பெருக இடப்பதற்கோர் வலாயத்தனே! என்று ஓலமிடுகின்றார். மற்றைய அன்பர்களும் இவ்வாறே கூறியுள்ளார். நாம் சொற்ப நேரமாகுதல் தியானிக்க வேண்டும். மனம் எதிலே செலுத்தப்படுகின்றதோ அதனைப் பற்றுவது அதனியல்பு. நாம் பக்தியோடு தியானிக்க வேண்டும். "பக்தியுடையார்யச் செய்யும்

முக்தி கொடுப்பவர் மூன்னின்
றருளுவார்'"

என்கிறார் பட்டினத்தடிகள். உடல், பொருள் ஆவி ஆகியவற்றை நாம் அர்ப்பணம் செய்தல் ஆணைவழிநின்று தொழவேண்டும். இதனை வலியுறுத்த "அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாம்...." என்று வாசகப் பெருமான் கூறியுள்ளார். பஞ்சமா பாதகங்களை விலக்கி நடத்தல் வேண்டும். அடியார் உறவும் பூசையும் நேசமும் வேண்டும் 'பாடலுக்கு இரங்குவார் பரமர்" "பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணின்ற 'விண்ணொடும் மணிகண்டன்" என்றபடி இனிய பண்ணுடன் இசைபாடும் அடியார்க்கு மண்ணும் விண்ணும் கொடுப்பார். இராவணன் கைலாச மலையைத் தூக்க முயன்றபோது பெருமான் பெருவிரலால் ஊன்ற அவன் நசுக்கப்பட்டான். அவன் தன் தலையைப் பிடுங்கி யாழ் செய்து சாமம் இசைத்தான். உடனே பரமர் இரங்கி அவனுக்கு நல்வழி காட்டினர். சுந்தரருக்குப் பசி வந்ததால் அவர் மனமவருந்தி 'எம்மை வாட்டும் இப்பசியினுக்கு எவர்' என்று பாடினர் உடனே எம்மையாள் காருணிய பரம்பொருள் கிழப்பிராமண உருவமெடுத்துவந்து அவர் பசியை நீக்கினர்.

நாம் பாட்டின் பயன்களை ஆராய்வாம்:

"திருவாசக மிங்கொருகால் ஓதின்
கருங்கல் மனமுங் கரைந்துருகக்
கண்கள்"

என்றார் மேதாவியார்.

"திருவாசகத்திற்கு உருகாதார்
ஒருவாசகத்திற்கு முருகார்"

எனனும் பழமொழியமுண்டு. ஆகலால் நாம் வாசகங்களை ஈசன்முன் பாடி நெக்குநெக்குருகல் வேண்டும். மாணிக்கவாசகர் எழுதியதற்கும் மற்ற மூவர் எழுதிய தேவாரங்களுக்கும் இடையே ஓர் சிறப்பான வித்தியாசமுண்டு. மூவரும் ஈசன் கற்பித்ததல்ல, சொல்லிக்கொடுத்த கருத்துக்களை உள்ளடக்கிப் பாடியிருக்கின்றனர். ஆனால் திருவாசகத்திலே சுவாமிகள் தாம் கண்ட அநுபவங்களையும் பதிபசு பாசங்களின் இயல்புகளையும் மனிதன் ஜீவேந்திரனாய் இருக்குங்காலத்து ஒருமையினின்றும் நீங்காத கஷ்டங்களையும் தாம் அநுபவித்தபடி மனங் கரைந்துருகும்படி பாடியுள்ளார். இதனைப் படிப்பவர் ஆனந்தக்கண்ணீர் சொரிவர். படிக்கப்படிக்கத் தெவிட்டாத இன்பத்தைத் தரும் அன்பைப் பெருக்கும். இன்பத்தை வளர்க்கும். பிறவிப் பிணியை அறுக்கும். சுவாமிகள் திருவாசகம் முற்றிலும் கடவுளோடு அளவளாவி அவரும் தானும் வேறல்ல, பதியும் பசுவும், சிவனும் சீவனும், பூவும் மணமும், நெருப்பும் சூடும் வேற்றுமையில்லையென்று கடவுளை வாழ்த்துகின்றார், துதிக்கின்றார், ஏறுகின்றார், போற்றுகின்றார், ஏங்குகின்றார், பழிக்கின்றார், வைகின்றார். இவைபோன்ற சில குறிப்புக்களை சற்று நோக்குவாம்.

கடவுளை ஏகதாளநுதியாக சுவாமிகள் பாடியிருக்கிறார்.

"தாராகை போலும் தலைத்தலை மாலைத் தழலாய்பன், வீரவென்றனை வந்திடடைய விடுவேனோ கா பாடியாகவேனை ஆன்றுத்தர்கோசமங்

கைக்கரசின் சீரடியாரடியானென்று சிரிப்பிப்பனே."

இதன் தாற்பரியம் என்னவெனில் சந்தையிலே மாலையணிவதற்குப் பதிலாக மண்டை ஓடுகளை எடுத்துக்கட்டியிருக்கின்றாய்; உன்னுடைய அறியாமையைப் பெரியோர்கள் நினைந்து நகைத்து அவமதிப்பார்கள்.

ஈத்தல் விண்ணப்பத்தில்
சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைப்
தொழும்பையுமீசற் கென்று
சிரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியி
னுரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ்
சூண்பிச்ச னூர்ச் சுடுகாட் டெரிப்பிச்ச
னென்னையு மாளுடைப் பிச்சனென
றேசுவனே

கடவுளைப்பித்தன்பேயனென்று இன்னொரு பாட்டில் அவமானமாய்ப் பழிக்கிறார்.

உழைதரு நோக்கியர் கொவ்வைப்
பலாப்பழத் தீயினெய்ப்பாய்
விழைதருவேனை விடுதிகண்டாய்
விடின் வேலை நஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி
மானிடன் றேய்மதியன்
பழைதரு மாபாரனென் றென்
றுறைவன் பழிப்பினையே

மாதாவு செய்கையாகிய, பலாப்பழத்தில் ஒட்டிக்கொண்ட ஈயைப்போல் வருந்துகின்ற என்னை விடுதல் தகுதியன்று விடின் பழிப்பேன் இவைகள் காதற்பேச்சு (terms of endearment) காதல் மிகுந்தவர் பேசும் வழக்கம் சொற்சுவை மிகுந்திருக்கிறது. உதாரணமாக "செழுக கமலத் திரளனை" என்னும் பாவால் விளங்கும். தேவாரங்களிற் காணும் உண்மைகளைக் காட்டிலும் அதி உண்மைகள் இங்கு வெளிப்பட்டிருக்கின்றன. பதியடைந்து பசு அநுபவிக்கும் இன்பம் எழுதினை வரியும் எல்லாச சமயத்தார்க்கும் சிவன் முதற்கொடுப்ப ரென்பதனை

"அறுவகைச் சமயத்தறுவகை
யோர்க்கும்"
'வீடுபேறாய் நின்றவிண்ணோர்ப்பகுதி,
என்பதிலும்

'படைப்பாற்படைப்பும்
..........என்பதில் சிவன தலைமையையும் கடவுளியல்பைப் பூவின் நாற்றம் போற்றுயர் தன்னும் என்பதிலும்

'தோலும் துகிலும் என்பதில் சிவன் உருவத்தையும் பெற்றதாய்தனை மறக்கலும் என்பதில் நன்னிலையடையும் விதத்தையும் "அன்றே என்தன" என்பதில் தம்மையாட் கொண்டதையும் மாணிக்கவாசகர் நாயினேனென்னும் பொழுது நாம் நாயினும் கடையவர் என்பதும் பெறப்படுகிறது. ஆதலால் நாம இப்புழுக்கூடு நீங்க வீடுபேறு தருநாதற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக! திருவாசகம் ஓதுங்கால் எம்மையறியாது கண்ணீர் ததும்புகிறது. அதனால் நாம் உணரக்கூடியது என்னவெனில் திருவாசகம் சைவமதத்தவர்க்கு ஓர் அரும் பொக்கிஷம்.

மனத்தை நெக்குநெக்குருகச்செய்யும் திருவாசகத்தை யாவரும் அன்புததும்ப நாடோறும் ஓதி அவனருளால் அவன் தாளையும் வணங்கி வீடுபேற்றை அடைவோமாக.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday July, 19, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org